**செய்தி வெளியீடு எண் 567** **நாள் 10.11.2014**

**செய்தி வெளியிடு**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் இன்று 10.11.2014 காலை அண்ணா நகர் டவர் அருகில் அமைந்துள்ள நவீனமயமாக்கப்பட்ட ஆவின் டவர் பாலகத்தைத் திறந்து வைத்தார். தமிழ்நாடு பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு அ. மில்லர் அவர்கள் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அரசு செயலர் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும் மீன்வளம் செயலர் **முனைவர்** எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் / நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

ஆவின் அண்ணாநகர் டவர் பாலகம் சுமார் ரூ.20 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்ட பாலகமாக மாற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து நுகர்வோர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் இந்த பாலகத்தில் வாங்கும் **ஐஸ்கிரீம் பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் 10 சதவிகிதம் தள்ளுபடி வரும் 12.11.2014 வரை வழங்கப்படும்** என்ற செய்தியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். **இந்த சலுகை அண்ணாநகர் ஆவின் டவர் பாலகத்திற்கு மட்டுமே பொருந்தும்.**

இந்த பாலகத்தில் அனைத்து ஆவின் பால் பொருட்கள், பீசா மற்றும் பல்வேறு வகைளில் ஐஸ்கிரீம் விற்பனை செய்யப்படும். நுகர்வோர் தங்களுக்கு பிடித்தமான ஐஸ்கிரீம் வகைகளை தேர்ந்தெடுத்து வேண்டிய அளவுகளில் தனியாகவோ அல்லது பல்வேறு ஐஸ்கிரீம் வகைகளை கலந்தும் அதனுடன் முந்திரி, பாதம் போன்ற தங்களுக்கு தேவையான பருப்புக்களை சேர்த்து சாப்பிடும் வகையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பாலகத்தின் சிறிய அளவிலான விழாக்களை கொண்டாடும் விதமாக இடம் பின்புறம் கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர்கள்

தங்கள் குடும்பத்துடன் இந்த பாலகத்திற்கு வந்திருந்து ஆவின் பொருட்களை உண்டு மகிழலாம் குடும்ப விழாக்களையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம்.

சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் ஆவின் நிறுவன பாலகங்கள், உரிமம் பெற்ற சில்லறை விற்பனை நிலையங்கள் , சலுகைதாரர்களால் நடத்தப்படும் பாலகங்கள் ஆக மொத்தம் **365** இடங்களில் ஆவின் பால், வெண்ணெய், நெய், பால்பொடி, சுவையூட்டிய நறுமணப்பால், மில்க்ஷேக், பால்கோவா, பேரீச்சம்பழ கோவா, யோகர்ட், புரோபயாடிக் லஸ்ஸி, புரோபயாடிக் தயிர், டேட்ராபேக்கில் மோர், மைசூர்பா, குலோப்ஜாமூன், சாக்லேட்வெவ்வேறு விதமான ஐஸ்கிரீம்கள் என அனைத்து பால்பொருட்களையும் விற்பனை செய்து வருகிறது. ஆவின் நிறுவனம் பால்பொருட்கள் விற்பனை செய்யும் பாலகங்களை நவீனப்படுத்தி வருகிறது. இதன் முதல் கட்டமாக நவீன முறையில் வடிவமைக்ப்பட்ட அண்ணா நகர் ஆவின் டவர் பாலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்துள்ளார்கள். அடுத்த கட்டமாக விருகம்பாக்கத்தில் ஆவின் டிரைவ் இன் பாலகமும், பெசன்ட் நகரில் நவீன பாலகமும் ஏற்படுத்த ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திருவான்மியூர், தி.நகர் ஆகிய இடங்களில் ஆவின் நவீனமயமாக்கப்பட பாலகத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி ஆர்.க_லட்சுமி, இ.ஆ.ப., பொது மேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**